சென்னை அண்ணா அறிவாலயத்தில் தொகுதிப்பங்கீட்டு பேச்சுவார்த்தை குழு தலைவர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் இ.பெரியசாமி, க.பொன்முடி, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், திருச்சி சிவா எம்.பி. ஆகியோர் தொகுதிப் பங்கீடு குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொகுதிப் பங்கீடு குழுவினரிடம் ஆலோசனை மேற்கொண்டனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பி.சம்பத், பெ.சண்முகம், மாநில செயற்குழு உறுப்பினர்கள் என்.குணசேகரன், கே.கனகராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு அவர்கள் சென்னை வடக்கு மாவட்டம்,ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டம்,நேதாஜி நகர் மெயின் தெரு நேதாஜி சிலை அருகில் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து, விண்ணை தொடும் விலைவாசி குறித்தும் துண்டு பிரச்சாரம் வீடு வீடாகச் சென்று வழங்கினார். நிகழ்ச்சிக்கு 38வது வட்டச் செயலாளரும் மண்டல குழு தலைவருமான நேதாஜி யு.கணேசன் தலைமை வகித்தார்.நிகழ்ச்சியில் இந்திய மாணவர் மன்றம் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒரு கோடி பொதுமக்களை சந்தித்து வீடு வீடாக சென்று கையெழுத்து இயக்கம் துவக்கி வைக்கப்பட்டது. மாநிலத் துணை செயலாளர மு. வீரபாண்டியன், சந்தானம்,மாவட்ட கழக செயலாளர் வெங்கடேஷ் வேம்புலி, மாமன்ற உறுப்பினர் ரேணுகா எம்.சி, அகில இந்திய மாமன்ற இளைஞர் பேரவையின் செயலாளர் ராஜா, பகுதி செயலாளர் ஜெய்சங்கர்,பாரதி, தினேஷ்,பாரதி, நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### வி.இரமேஷ் தலைமை! ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# அம்பத்தூர் 82வது வட்டத்தில் தையல் தொழிலாளர்களுக்கு நல உதவிகள்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகின்றனர்!

சென்னை, பிப்.27-

மார்ச்1. மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதி 82 வது வட்டத்தில் சூரியச்சுடர் 22 ஒன்று சேர்ப்பது திராவிட மாடல் உணர்வில் மலரும் லட்சியப் பூக்கள் எம்பிராய்டிங் தையல் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. நாளை 28.02.2024 புதன் கிழமை காலை 8.00 மணி இடம் எ.வி.எஸ். மஹால் 18/3 மெயின் ரோடு. அம்பத்தூர் டி.என்.இ. காலனி, பெட்ரோல் பங்க் எதிரில்

தலைமை பொதுகுழு உறுப்பினர் 82 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வி.இரமேஷ் (எ) நீலகண்டன் தலைமையில் கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, அம்பந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், 7வது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, எம்.டிஆர். நாகராஜ், இராஜகோபால், மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் சாந்தகுமாரி, மோகன், டாக்டர்.பூர்ணிமா, கிருஷ்ணமூர்த்தி, ஜி.வி.நாகவள்ளி, து.ஆயிரம், ஜெ.பாலமுருகன், உஷா நாகராஜ். முன்னிலையில், 171 தையல் எம்ராய்டரி தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்கள் தலைமை நிலையச் செயலாளர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், மேயர். பிரியா ராஜன், கழக துனை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ., கழக பொறியாளர் அணி இணைச்செயலாளர் வெற்றி அழகன், எம்.எல்.ஏ., மாநிலத் தொழிலாளர் அணி செயலாளர் அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர் செல்வராஜ் மாநில நிர்வாகிகள் பா.ரங்கநாதன், கே. சந்துரு, கே.எஸ். இரவிச்சந்திரன், சங்கரிநாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், என்.பிபாம். ஷேக்அப்துல்லா, சிமகேஷ்குமார், பரிதி இளம்சுருதி, ஆர்.வரதன்.

வரவேற்புரை வட்ட கழக நிர்வாகிகள் ஆர்.ராஜா, கோ.எஸ். தேவிகா சுகுமார், இரா. திருவேங்கடம், கே.தேவராஜ், இ. மோகள், ஸ்ரீபதி, டீ.தங்கவேல், ஜி.சுபாஷ், சந்திரபோஸ், எஸ்.அந்தோணி கிருபாவதி, எம். டில்லிமுத்து, ஜெ.கமல கண்ணன், பி. பாலகிருஷ்ணன், சீனிவாசன், ஜெ. கார்த்திக் பெ.சங்கர். மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் பகுதி கழக செயலாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

82 (அ) வட்ட கழக செயலாளர்கள் மு. சண்முகம், ஆ. சுந்தராஜன் நன்றி கூறுகின்றனர்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.! கே.எஸ். ரவிச்சந்திரன் சிறப்புரை!

# மயிலை கிழக்கு - மேற்குப் பகுதி பாக ஒருங்கிணைப்பாளர்கள் - பாக முகவர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர்கள் எஸ். முரளி - நந்தனம் கி.மதி வேண்டுகோள்!

சென்னை, பிப். 27 -

மயிலை கிழக்கு - மேற்கு பகுதி பாக முகவர்கள் கூட்டம் இன்று (27-02-2024 செவ்வாய் கிழமை) நடைபெறுகிறது. இது குறித்து பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி மதி எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனைகளையும் தமிழ்நாடு அரசின் 2024-25 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் சிறப்பம் சங்களையும் வீடு தோறும் கொண்டு சேர்க்கவும், ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ் நாட்டுக்கும் தமிழுக்கும் தமிழருக்கும் செய்து வரும் அநீதிகளைத் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கும் வகையில்

பிப்ரவரி 27-ம் தேதியன்று 'இல்லந்தோறும் ஸ்டாலின் குரல்' என்ற தலைப்பில் தின்னைப் பிரச்சாரத்தைத் தொடங்குவது என்ற அடிப்படையில் இதற்க்கென சட்டமன்ற தொகுதியிலும் தொகுதி பார்வையாளர்கள், பாக முகவர்கள் (BLA -2) பூத் கமிட்டி உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளைக் கொண்டு கூட்டங்களை நடத்தி, மக்களை அணுகுவது குறித்து ஆலோசிக்கவும் 27-ம் தேதி முதல் ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் பூத் கமிட்டியினர் ஒவ்வொரு வீடாகச் சென்று துண்டறிக்கைகளை வழங்கி ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களிடமும் 'இல்லந்தோறும் ஸ்டாலின் குரல்' என்ற பரப்புரை குறித்து விளக்கி, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அதனோடு மறைமுகக் கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வை முழுமையாக வீழ்த்தி கழக தலைவரின் குரல் டெல்லியிலும் நிறைவேறுவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட செயலாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படியும் பாக ஒருங்கிணைப்பாளர்கள் இன்று (27.02.24) மாலை 6 மணியளவில் முத்தமிழ் பேரவையில் பாகமுகவர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பங்கேற்று சிறப்பிக்கிறார்கள். மேலும் மயிலை தொகுதி பார்வையாளர் கே.எஸ்.. ரவிச்சந்திரன் பங்கேற்று உரையாற்றுகிறார்.

எனவே மயிலை பகுதியில் உள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள்,

வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அளவிலான அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆகியோர் தவறாமல் குறித்த நேரத்தில் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் பிரச்சாரம் குறித்து கழகதலைவர் ஆணைப்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆலோசனைபடி, கலைஞர்நகர்தெற்கு.வடக்கு பாகதலைவர்கள் கூட்டம், பகுதி செயலாளர்கள் கே.கண்ணன், மு. ராசா தலைமையில் நடந்தது. இதில் விருகம்பாக்கம் எ.எம்.பி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., கணக்குநிலைகுழு தலைவர் க.தனசேகரன் சிறப்புரையாற்ற, தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆலோசனை வழங்கினார். வட்ட செயலாளர்கள் (தெற்கு) பூக்கடை ஆர்.பழனிச்சாமி, இரா.செழியன், பி.கே.குமார், மு.அன்பழகன், சோ.செந்தில்குமார், அ.கதிரேசன், சதீஷ்கண்ணன், (வடக்கு) மு.கோவிந்தராஜ், மைக்கேல், விஏ.ராஜா, பழக்கடை பாஸ்கர், தஞ்சை பாபு முன்னிலையில் நடந்த இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பிஎஸ்.முருகேசன், எஸ்டி.தங்கராஜ், மாவட்ட துணை செயலாளர் வாசுகிபாண்டியன், 128வது வார்டு கவுன்சிலர் ரத்னா, மாவட்ட அமைப்பாளர்கள் கனிமொழிதனசேகரன், நிஷா, பகுதி நிர்வாகிகள் எஸ்.உமாபதி, அஜந்தாரவி, பெ.தியாகு, அ.பாபு மற்றும் நிர்வாகிகள் பாக தலைவர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!

# திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் தெருமுனைக் கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, பிப்.27-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளான மனிதநேய திருநாளையொட்டி கழக ஆட்சியின் சாதனைகளை விளக்கம் மோடி ஆட்சியின் வேதனைகளையும் எடுத்துக் கூறி நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை பிரச்சாரம் கூட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் கீழ்காணும் அட்டவணைப்படி தெருமுனை கூட்டங்கள் நடைபெறுகிறது என்று மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவித்துள்ளார்.

27.02.2024 - மாலை 4.00 மணி - திருவள்ளூர் நகரம் - கரூர் முரளி - நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன்,

28.02.2024 - மாலை 4.00 மணி - பள்ளிப்பட்டு வடக்கு - சேலம் சுஜாதா - ஒன்றிய செயலாளர் சி. ஜெ.சீனிவாசன்,

28.02.2024 - மாலை 4.00 மணி - பள்ளிப்பட்டு மத்தியம் - எழும்பூர் கோபி - ஒன்றிய செயலாளர் பி.டி.சந்திரன்,

29.02.2024 - மாலை 4.00 மணி - திருத்தணி கிழக்கு - காவேரிபாக்கம் இளையராஜா - ஒன்றிய செயலாளர் பா.ஆர்த்தி ரவி,

29.02.2024 - மாலை 4.00 மணி - திருத்தணி மேற்கு - வண்ணை புகாரி - ஒன்றிய செயலாளர் என். கிருஷ்ணன்,

29.02.2024 - மாலை 4.00 மணி-R.K.பேட்டை கிழக்கு - ஒப்பிலாமணி - ஒன்றிய செயலாளர் பெ.பழனி,

29.02.2024 - மாலை 4.00 மணி - R.K.பேட்டை மேற்கு - தானூர் சிவக்கொழுந்து - ஒன்றிய செயலாளர் சி.என்.சண்முகம்,

04.03.2024 - மாலை 4.00 மணி - திருத்தணி நகரம் - சென்னை அரங்கநாதன் - நகர செயலாளர் வி.வினோத் குமார்,

04.03.2024 - மாலை 4.00 மணி - பள்ளிப்பட்டு தெற்கு - பசும்பொன் ரவிச்சந்திரன் - ஒன்றிய செயலாளர் ஜி.ரவீந்திரா,

04.03.2024 - மாலை 4.00மணி - திருவாலங்காடு கிழக்கு - வாசு கருணாநிதி - ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம்,

04.03.2024 - மாலை 4.00மணி - திருவாலங்காடு மேற்கு - தூத்துக்குடி தமிழ் பிரியன் - ஒன்றிய செயலாளர் கூஸூர் எம்.ராஜேந்திரன்,

05.03.2024 - மாலை 4.00 மணி - பள்ளிப்பட்டு பேரூர் - ஒசூர் அப்துல்ரஹ்மான்பாரி - பேரூர் செயலாளர் எம்.ஜே.ஜோதிகுமார்,

05.03.2024 - மாலை 4.00 மணி - பொதட்டூர் பேட்டை பேரூர் - தமிழ் சாதிக் - பேரூர் செயலாளர் டி.ஆர்.கே.பாபு,

06.03.2024 - மாலை 4.00 மணி - கடம்பத்தூர் மேற்கு - வரகூர் காமராஜ் - ஒன்றிய செயலாளர் மோ.ரமேஷ்,

06.03.2024 - மாலை 4.00 மணி - கடம்பத்தூர் கிழக்கு - தக்கோலம் தேவபாலன் - ஒன்றிய செயலாளர் க.அரிகிருஷ்ணன்.

06.03.2024 - மாலை 4.00 மணி - பூண்டி மேற்கு - முரசொலி மூர்த்தி - ஒன்றிய செயலாளர் கிருஸ்டி (எ) அன்பரசு

ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தெருமுனை கூட்டத்திற்கு உரிய ஏற்பாடுகளை செய்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேற்கண்ட கூட்டங்களில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர், தொகுதி பார்வையாளர்கள், மாநில/மாவட்ட நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் தா.மோ. அன்பரசன் - இரா.நரேந்திரன் சிறப்புரை!

# ஆலந்தூர் தெற்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் என்.சந்திரன் அறிக்கை!

சென்னை,பிப்.27-

ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க ஆலோசனைக் கூட்டம் இன்று (27.02.2024 செவ்வாய்க்கிழமை) மாலை சரியாக 7:00 மணியளவில் நங்கநல்லூர் எம்.ஜி.ஆர் ரோடில் உள்ள ஹரிகரன் மகாலில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ. அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி பாக பொறுப்பாளர் இரா. நரேந்திரன் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்குகின்றனர்.

எனவே ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட அனைத்து பாகமுகவர்கள் (BLA 2),பாக பொறுப்பாளர்கள்,தவறாமல் கலந்து கொள்ளும் படியும் மற்றும் ஆலந்தூர் தெற்கு பகுதிக்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்,மாவட்ட அணிகளின் நிர்வாகிகள்,மாவட்ட பிரதிநிதிகள்,வட்ட கழக செயலாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள்,பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,வட்ட நிர்வாகிகள், வட்ட இளைஞரணியினர்,மகளிரணியினர்,சிறப்பு அழைப்பாளர்கள்,பாக நிர்வாகிகள்,கழக தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1 கழக தலைவர், முதல்வர் பிறந்த நாள் விழா, பிப்28 இல் லந்தோறும் ஸ்டாலின் குரல் திண்ணை பிரச்சாரம், கழக ஆக்க பணிகள்

இவ்வாறு பகுதிச் செயலாளர் என்.சந்திரன் தெரிவித்துள்ளார்.

### பாக முகவர்கள் (பிஎல்ஏ-2) - குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க.

# தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் - கிளைச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், பிப்.27

'இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல்' என்கின்ற தலைப்பில் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் பரப்புரை நிகழ்ச்சி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவுரைக் கிணங்க திருப்பெரும்புதூர் தேர்தல் பார்வையாளர் வே.உமாகாந்த் முன்னிலையில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பாக முகவர்கள் (பி.எல்.ஏ.-2)- தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் - கிளைச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (27.2.2024) கீழ்க்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

எனவே இந்தக் கூட்டத்தில் தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள் (பி.எல்.ஏ.-2), தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்று இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற தங்களுடைய ஆலோசனைகளை வழங்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் நாள், ஊராட்சிகள், பாகம், இடம் விவரம் வருமாறு:-

இன்று (27.2.2024) காலை 7 மணிக்கு - நந்தம் பாக்கம் ஊராட்சி - பாகம் 15-க்கு உட்பட்ட வார்டுகள், சிறுகளத்தூர் ஊராட்சி - பாகம் 5-க்கு உட்பட்ட வார்டுகள், மலையம்பாக்கம் ஊராட்சி - பாகம் 10-க்கு உட்பட்ட வார்டுகள், கொல்லச்சேரி ஊராட்சி - பாகம் 4-க்கு உட்பட்ட வார்டுகள், கொழுமணிவாக்கம் ஊராட்சி - பாகம் 3-க்கு உட்பட்ட வார்டுகள், சிக்கராயபுரம் - பாகம் 8-க்கு உட்பட்ட வார்டுகளுக்கு - சிறுகளத்தூர் கே.எம்.பேலஸிலும்,

காலை 10 மணிக்கு அமரம்பேடு ஊராட்சி - பாகம் 1-க்கு உட்பட்ட வார்டு, சோமங்கலம் - ஊராட்சி - வார்டு 4-க்கு உட்பட்ட வார்டுகள், திருமுடிவாக்கம் ஊராட்சி - பாகம் 3-க்கு உட்பட்ட வார்டுகள், பழந்தண்டலம் - பாகம் 4-க்கு உட்பட்ட வார்டுகள், எருமையூர் - பாகம் 2-க்கு உட்பட்ட வார்டுகள், பூந்தண்டலம் - பாகம் 7-க்கு உட்பட்ட வார்டுகள், நடுவீரப்பட்டு பாகம் 6-க்கு உட்பட்ட வார்டுகள், வரதராஜபுரம் பாகம் 10-க்கு உட்பட்ட வார்டுகளுக்கு - சோமங்கலம் மீனாட்சி திருமண மண்டபத்திலும்,

காலை 11 மணிக்கு - படப்பை - பாகம் 16-க்கு உட்பட்ட வார்டுகள்,கரசங்கல் பாகம் 4-க்கு உட்பட்ட வார்டுகள், மணிமங்கலம் பாகம் 8-க்கு உட்பட்ட வார்டுகள், மலைப்பட்டு பாகம் 1-க்கு உட்பட்ட வார்டு, சேத்துப்பட்டு -

பாகம் 1-க்கு உட்பட்ட வார்டு, சேத்துப்பட்டு - பாகம் 1-க்கு உட்பட்ட வார்டுகளுக்கு - படப்பை சி.என்.சி. திருமண மண்டபத்திலும்,

காலை 11.30 மணிக்கு எழிச்சூர் - பாகம் 2-க்கு உட்பட்ட வார்டுகள், வடக்குப்பட்டு பாகம் 2-க்கு உட்பட்ட வார்டுகள், நாட்டரசன்பட்டு பாகம் 2-க்கு உட்பட்ட வார்டுகள், வளையக்கரணை பாகம் 3-க்கு உட்பட்ட வார்டுகள், சென்னைக் குப்பம் - பாகம் 3-க்கு உட்பட்ட வார்டுகள், செரப்பணஞ்சேரி பாகம் 6-க்கு உட்பட்ட வார்டுகள், வைப்பூர் பாகம் 3-க்கு உட்பட்ட வார்டுகள், சாலமங்கலம் பாகம் 5-க்கு உட்பட்ட வார்டுகளுக்கு - குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொருளாளர் இ.பார்த்தசாரதி இல்லம் - ஆராம்பாக்கத்திலும்,

பகல் 12 மணிக்கு - மாடம்பாக்கம் பாகம் 9-க்கு உட்பட்ட வார்டுகள், ஆதனூர் பாகம் 10-க்கு உட்பட்ட வார்டுகள், ஓரத்தூர் பாகம் 4-க்கு உட்பட்ட வார்டுகள், காவனூர் பாகம் 2-க்கு உட்பட்ட வார்டுகளுக்கு - மாடம்பாக்கம் லட்சுமி நாராயணா திருமண மண்டபத்திலும் கூட்டங்கள் நடைபெறுகிறது.

இவ்வாறு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தெரிவித்துள்ளார்.

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட பாக முகவர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட திருவள்ளூர் மற்றும் திருத்தணி தொகுதிக்கான பாகமுகவர்கள் BLA-2, BLC கள் ஆலோசனைக் கூட்டம் கீழ்க்காணும் விவரப்படி நடைபெறும்.

இன்று 27.02.2024 - திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி. இடம்: ஸ்ரீசாய்ராம் மஹால், பூண்டி. நேரம்: மாலை 4.00 மணி. நாளை 28.02.2024 - திருத்தணி சட்டமன்ற தொகுதி - இடம்: ஸ்ரீவாரி திருமண மண்டபம், பொதட்டூர்பேட்டை. நேரம்: மாலை 4.00 மணி.

மேற்கண்ட கூட்டங்களில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர், தொகுதி பார்வையாளர்கள், மாநில/மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய/நகர/பேரூர் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: இல்லந்தோறும் தலைவர் ஸ்டாலின் குரல் வீடுவீடாக தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களை வழங்கி திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் கழக வளர்ச்சி.

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.**

செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.